## மஸ்ஜிதுகள்

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய உம்மத்தினருக்காக (முஸ்லிம் சமுதாயத்தினர்) அல்லாஹ் தஆலா இந்தப் பூமி முழுவதுமே தொழுகைக்கான இடமாக (மஸ்ஜித்) ஆக்கியுள்ளான். அதாவது, ஒரு முஸ்லிம் எந்த இடத்திலும் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால், ஒரு நிபந்தனை உண்டு, அந்த இடம் சுத்தமானதாக இருக்கவேண்டும். மஸ்ஜிதுகள் இந்தப் பூமியின் பரப்பளவு அனைத்திலும் புனிதத்தன்மைமிக்க இடங்களாகும், இவை அல்லாஹ்வின் இல்லங்களாகும். அவற்றைக் கட்டி நிர்மாணிப்பவர்களுக்கு அல்லாஹ் தஆலா மிகப்பெரிய பிரதிபலனையும் கூலியையும் நிர்ணயித்துள்ளான். ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, எவர் ஒருவர் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக மட்டுமே ஒரு பள்ளிவாசலைக் கட்டினால். அல்லாஹ் தஆலா அவருக்காக சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கட்டி விடுகின்றான் (புக்ஹாரி, முஸ்லிம்).

ஒரு முஸ்லிம் பள்ளிவாசலை நோக்கிச் செல்வது அவர் அல்லாஹ்வை சந்திப்பதற்காகச் செல்வது போன்றதாகும். இந்தத் தருணம் அவனுக்காக மிகவும் முக்கியமானதாகவும் புனிதமானதாகவும் இருக்கும். ஆகவே, அந்நேரங்களில் மிக அதிகமாகவே அல்லாஹ்விடம் துஆ கேட்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது இந்தத் துஆவை ஓதுவார்கள்:

**اللهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا، وَفِي سَمْعِي نُورًا، وَفِي بَصَرِي نُورًا، وَعَنْ يَمِينِي نُورًا، وَعَنْ شِمَالِي نُورًا، وَأَمَامِي نُورًا، وَخَلْفِي نُورًا، وَفَوْقِي نُورًا، وَتَحْتِي نُورًا، وَاجْعَلْ لِي نُورًا**

பொருள்: *அல்லாஹ்வே, என்னுடைய இதயத்தில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, என்னுடைய கண்களில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, என்னுடைய செவியுறும் ஆற்றலில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, என்னுடைய வலது புறத்தில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, என்னுடைய இடது புறத்தில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, எனக்கு மேலாக பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, எனக்குக் கீழாக பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, எனக்கு முன்பாகப் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, எனக்குப் பின்னாலும் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக, எனக்காகப் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக (முஸ்லிம்).*

மஸ்ஜிதுகளில் பிரவேசிப்பதில் ஒரு சுன்னத்தான முறை என்னவெனில், இந்த துஆவை ஓதவேண்டும்:

**أَعُوذُ بِاللَّهِ الْعَظِيمِ، وَبِوَجْهِهِ الْكَرِيمِ، وَسُلْطَانِهِ الْقَدِيمِ، مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ**

www.uzalfalah.com

அவர்கள் ﷺ கூறுகிறார்கள், இதனை யார் ஓதுவார்களோ அவர் அந்த நாள் முழுவதும் ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பாக இருப்பார் (அபூ தாவூத்). பள்ளிவாசலில் பிரவேசிக்கும்போது முதலில் வலது காலை எடுத்து வைக்கவேண்டும் மற்றும் வெளியில் செல்லும்போது முதலில் இடது காலை எடுத்து வைக்கவேண்டும் மற்றும் இந்த துஆவையும் ஓதவேண்டும்.

بِسْمِ اللَّهِ،وَالسَّلَامُ عَلَى رَسُولِ اللَّهِ،اللَّهُمَّ اغْفِرْ لِي ذُنُوبِي،وَافْتَحْ لِي أَبْوَابَ فَضْلِكَ (أحمد،الترمذي،إبن ماجة)

பள்ளிவாசலுக்குச் செல்வதும், அங்கேயே அமர்ந்திருப்பதும், அதுவே ஒரு நன்மையான செயலாகும். இறைத்தூதர் அவர்கள் ﷺ கூறுகிறார்கள், எவர் ஒருவர் மஸ்ஜிதுக்குச் செல்வாரோ அல்லது மஸ்ஜிதிலிருந்து புறப்பட்டுச் செல்வாரோ அவருக்காக அல்லாஹ் தஆலா விருந்திற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றான் (முஸ்லிம்)

## தஹிய்யதுல் மஸ்ஜித்

எவர் ஒருவர் மஸ்ஜிதுக்குச் செல்வாரோ அப்போது அவர் உதூ செய்து இரண்டு ரகஅத்துகள் தொழுகையை நிறைவேற்றவேண்டும், இது தஹிய் யதுல் மஸ்ஜித் எனப்படும். இறைத்தூதர் அவர்கள் ﷺ கூறுகிறார்கள்,

إِذَا دَخَلَ أَحَدُكُمُ المَسْجِدَ فَلْيَرْكَعْ رَكْعَتَيْنِ قَبْلَ أَنْ يَجْلِسَ

*பொருள்: உங்களில் எவரும் பள்ளிவாசலில் பிரவேசித்தால், அவர் உட் கார்ந்துகொள்வதற்கு முன்பாகவே இரண்டு ரகஅத்துகள் தொழுகையை நிறைவேற்றிக்கொள்ளட்டும்* (பெரும்பாலான முஹத்திஸீன்கள்).

## அல்லாஹ்விடத்தில் எந்தெந்த மஸ்ஜிதுகள் சிறப்புமிக்கவை

இறைத்தூதர் அவர்கள் ﷺ கூறுகிறார்கள், மூன்று மஸ்ஜிதுகளைத்தவிர எந்த ஒரு மஸ்ஜிதுக்கும் செல்வதற்கான நிய்யத்துடன் பிரயாணத்தை மேற் கொள்ளாதீர்கள்:

**முதலாவது : மஸ்ஜிதுல் ஹராம்**
**இரண்டாவது : என்னுடைய இந்த மஸ்ஜித் (மஸஜிதுன் நபவி)**
**மூன்றாவது : மஸ்ஜிதுல் அஃக்ஸா**

(பெரும்பாலான முஹத்திஸீன்கள்). மற்றொரு நபிமொழியில் அவர்கள் ﷺ கூறுகிறார்கள், என்னுடைய இந்த மஸ்ஜிதில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை மற்ற மஸ்ஜிதுகளில் நிறைவேற்றப்படும் தொழுகையைவிட ஆயிரம் மடங்கு அதிகப் பலனையுடையதாகும், மஸ்ஜிதுல் ஹராமைத் தவிர (கஅபா). (புக்ஹாரி)



www.uzairfalahi.com

**மஸ்ஜிதுகளில் எந்தெந்தச் செயல்கள் விரும்பத்தகாதவை**

1 இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், எவர் ஒருவர் பூண்டு, வெங்காயம் அல்லது கர்ராஸ் (ஒருவகை சமயற்பூண்டுவகை) ஆகியவற்றை உட்கொண்டார்களோ அவர்கள் எங்களுடைய மஸ்ஜிதுகளில் பிரவேசிக்கவேண்டாம். ஏனெனில், எந்தப் பொருட்களினால் மனிதர்களுக்குத் தொல்லை ஏற்படுகின்றதோ அதனைக்கொண்டு வானவர்களுக்கும் கஷ்டம் ஏற்படுகின்றது (புக்ஹாரி, முஸ்லிம்). ஆகவே, எவரும் இவ்வகையான துர்நாற்றமுடைய எந்தப் பொருளையும் உட்கொண்டிருந்தால் அவர் அதனை நீக்குவதற்காக இலவங்கம் அல்லது ஏதும் ஒரு நறுமணப் பொருளை வாயில் போட்டுக்கொள்ளவேண்டும்.

2 குரலை எழுப்புவது, அது தியானம் செய்வதானாலும் (திக்ரு) சரியே

3 ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் மஸ்ஜிதில் பிரவேசித்தார்கள், அங்கே ஒருவர் தன்னுடைய முழங்காலை மார்புடன் அணைத்துக் கொண்டும் இரண்டு கைவிரல்களையும் கோர்த்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தார். அவர்கள் ﷺ சைகை மூலம் இவ்வாறு இரண்டு கைவிரல்களையும் கோர்த்துக்கொண்டு உட்காராதீர் என்று கூறினார்கள். அந்த மனிதர் அதனை விளங்கிக்கொள்ளவில்லை, அதன் பின் கூறினார்கள்: உங்களில் எவரும் மஸ்ஜிதுகளில் பிரவேசித்தால் இவ்வாறு இரண்டு கைவிரல்களையும் கோர்த்துக்கொண்டு உட்காராதீர்கள், ஏனெனில், இது ஷைத்தானுடைய செயலாகும். நீங்கள் எது வரை மஸ்ஜிதுகளில் தங்கியிருப்பீர்களோ பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டுச்செல்லாதவரை இறைவணக்கத்தில் இருப்பது போன்றதாகும் (அஹ்மத்).

4 எச்சில் துப்புதல், மூக்கு சிந்துதல்

5 பள்ளிவாசலைக் கடந்துசெல்லும் பாதையாகப் பயன்படுத்துதல்

6 தொழுகை நிறைவேற்றப்படுவதற்கான இடத்தில் உதூ செய்வது, குறிப்பாக, அந்த இடம் அசுத்தமானதாக ஆகிவிடும் வகையில். இருப்பினும், மஸ்ஜிதுகளில் உதூ செய்வதற்காக தனியாகவே ஒரு இடம் இருக்குமானால் அங்கே உதூ செய்துகொள்வதில் தவறில்லை.

7 மஸ்ஜிதுகளில் உணவு உட்கொள்வது. இருப்பினும், மஸ்ஜிதில் இதிகாஃப் மேற்கொண்டு தங்கியிருப்பவர்கள், வேறு ஊரிலிருந்து வந்தவர்கள், அல்லது உணவு உட்கொள்வதற்கு வேறு இடமே இல்லாதவர்கள் அவ்வாறு செய்யலாம்.

www.uzairfalahi.com

8 கவிதைகள் பாடுவது, இருப்பினும், அல்லாஹ்வையும் இறைத்தூதர் ﷺ அவர்களையும் புழ்ந்து பாடக்கூடியவையாகவோ, நற்பண்புகளை ஊக்குவிக்கும் வகையிலானவையாகவோ, உயர்வான இஸ்லாமியக் கோட்பாடுகளைப்பற்றியவையாகவோ இருந்தால் தவறில்லை. ஒரு முறை ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் ஹஜ்ரத் ஹஸ்சான் (ர) அவர்களை பள்ளிவாசலில் கவிதைகளைப் பாடுவதைக் கண்டார்கள். ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள், அதற்கு ஹஜ்ரத் ஹஸ் சான் (ர) அவர்கள் கூறினார்கள், நான் பள்ளிவாசலில் கவிதைகளைப் பாடிக்கொண்டிருந்தேன், அப்போது உங்களைவிடவும் மேலானவ ரான இறைத்தூதர் ﷺ அவர்களும் அங்கே இருந்தார்கள். அதன்பின், அவர்கள் ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்களை நோக்கிக் கூறி னார்கள், அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறகிறேன், உங்க ளுக்கு ஞபாகம் இருக்கின்றாதா, இறைத்தூதர் ﷺ அவர்கள், என்னி டம் அவர்கள் ﷺ சார்பாகப் பதிலளிக்குமாறும், அதில் அல்லாஹ் ரூஹுல் ஃகுத்சைக்கொண்டு உமக்கு உதவி செய்வான் என்றும் கூற வில்லையா? அதற்கு, ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் கூறினார் கள், ஆம், (எனக்கு ஞாபகமிருக்கின்றது, இறைத்தூதர் ﷺ அவர்கள் இவ்வாறே கூறியிருந்தார்கள்) (புக்ஹாரி, முஸ்லிம்).

9 பள்ளிவாசல்களில் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் செய்வது: இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

إِذَا رَأَيْتُمْ مَنْ يَبِيعُ أَوْ يَبْتَاعُ فِي المَسْجِدِ، فَقُولُوا: لَا أَرْبَحَ اللَّهُ تِجَارَتَكَ

பொருள்: *நீங்கள் மஸ்ஜிதுகளில் எவரும் ஒன்றை விற்பதையோ அல்லது அதனை ஒருவர் வாங்குவதையோ கண்டீர்களானால், கூறுங்கள் உங்கள் வியாபாரத்தில் இலாபம் ஏதும் கிடைக்கக்கூடாது* (திர்மிதி, ஹாகிம்).

10 காணாமற்போன ஒரு பொருளைப்பற்றி அறிவிப்பு செய்வது. ஒருவர் தன்னுடைய காணாமற்போன ஒரு பொருளைப்பற்றி எல்லோரிட மும் உரத்தக் குரலில் விசாரித்துக்கொண்டிருப்பது விரும்பத்தக்க தல்ல. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

مَنْ سَمِعَ رَجُلًا يَنْشُدُ ضَالَّةً فِي الْمَسْجِدِ فَلْيَقُلْ لَا رَدَّهَا اللهُ عَلَيْكَ فَإِنَّ الْمَسَاجِدَ لَمْ تُبْنَ لِهَذَا

பொருள்: *உங்களில் எவரும் ஒருவர் தன்னுடைய காணாமற்போன ஒரு பொருளைப்பற்றி உரத்தக் குரலில் அறிவிப்பு செய்துகொண்டி*



www.uzairfalahi.com

*ருப்பதைக் கண்டீர்களானால், அல்லாஹ் உங்களுடைய அந்தப் பொருளைக் கிடைக்காமலேயே செய்துவிடுவானாக என்று கூறவேண்டும், ஏனெனில், மஸ்ஜிதுகள் இதற்காகக் கட்டப்படவில்லை (முஸ்லிம்).*

11 மஸ்ஜிதுகளை அழகு அலங்காரம் செய்வதில் அளவு கடந்து செயல்படுவது. இதன் காரணமாக, தொழுகையாளிகளின் கவனம் பாதிக்கப்படுவதோடு, அவர்கள் அல்லாஹ்வை தியானிப்பதிலும் நிறைவேற்றும் தொழுகையிலும் கவனம் செலுத்த முடியாமற்போகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

لَا تَقُومُ السَّاعَةُ حَتَّى يَتَبَاهَى النَّاسُ فِي الْمَسَاجِدِ

*பொருள்: மக்கள் தங்களுடைய பள்ளிவாசல்களைப்பற்றி ஒருவரையொருவர் பெருமை கொண்டாடும் காலம் வராதவரை இறுதிநாள் ஏற்படாது (அஹ்மத், இப்னு ஹிப்பான்).*

**தொழுகை நிறைவேற்றக்கூடாத இடங்கள்**

1 **மரணித்தவர்கள் அடக்கம் செய்யப்படும் அடக்கஸ்தலங்கள் (ஃகப்ரஸ்தான்) அல்லது மஸ்ஜிதுகளில் காணப்படும் ஃகப்ருகளுக்கு அருகில்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

لَا تُصَلُّوا إِلَى الْقُبُورِ، وَلَا تَجْلِسُوا عَلَيْهَا

*பொருள்: ஃகப்ருகளுக்கு அருகில் தொழுகை நிறைவேற்றாதீர்கள், அதாவது, அவற்றை ஃகிப்லாவைப்போன்று ஆக்கித் தொழுகையை நிறைவேற்றாதீர்கள், அவற்றின்மீதும் உட்காராதீர்கள் (முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் கூறுகிறார்கள்:*

لَعَنَ اللَّهُ اليَهُودَ وَالنَّصَارَى، اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسْجِدًا

*பொருள்: அல்லாஹ் தஆலா யூதர்கள் மற்றும் கிறித்துவர்கள்மீது சாபத்தை உண்டாக்கினான், ஏனெனில், அவர்கள் தங்களுடைய நபிமார்களின் ஃகப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக்கொண்டனர். அதாவது, அந்த ஃகப்ருகளின்மீது ஆலயங்களைக் கட்டிக்கொண்டனர் (அஹ்மத், அபூ தாவூத்).*

2 **குப்பைக் கூளங்கள் போடப்படும் இடங்கள், பிராணிகள் அறுக்கப்படும் இடங்கள் மற்றும் ஒட்டகங்கள் அல்லது மற்றப் பிராணிகளின் தொழுவங்கள்** இவையனைத்தும் அசுத்தமான இடங்களாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,



www.uzairfalahi.com

لَا تُصَلُّوا فِي مَبَارِكِ الْإِبِلِ، فَإِنَّهَا مِنَ الشَّيَاطِينِ

*பொருள்: ஒட்டகங்கள் உட்காரவைக்கப்படும்இடங்களில் தொழுகை நிறைவேற்றாதீர்கள், இவைனயனைத்தும்ஷைத்தான்களுடையஇடங் களாகும். (அஹ்மத், அபூ தாவூத்).*

3 **குளியலறைகள்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

الْأَرْضُ كُلُّهَا مَسْجِدٌ إِلَّا الْحَمَّامَ وَالْمَقْبَرَةَ

*பொருள்: குளியலறைகள் மற்றும் அடக்கஸ்தலங்களைத்தவிர இந்தப் பூமி முழுவதுமே வணக்கம் (தொழுகை) நிறைவேற்றத்தகுந்த இடங் களாகக் கருதப்படும் (அபூ தாவூத், திர்மிதி, இப்னு மாஜா, அஹ்மத்).*

4 **பொதுவான நடைபாதைகளில் தொழுகை நிறைவேற்றுவது**

5 **கஅபாவின் கூரைமீது**

## கஅபாவிற்கு உள்ளே தொழுகை நிறைவேற்றுதல்

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர), ஹஜ்ரத் பிலால் பின் ரபாஹ் (ர) மற்றும் ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் தல்ஹா (ர) ஆகி யோருடன் கஅபாவில் பிரவேசித்தார்கள் மற்றும் அதன் கதவை மூடிக் கொண்டார்கள். கதவைத் திறந்தபோது ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ர) எட்டிப்பார்த்து ஹஜ்ரத் பிலால் பின் ரபாஹ் (ர) அவர்களிடம் கேட் டார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் இதற்கு உள்ளே தொழுகையை நிறை வேற்றினார்களா? அதற்கு அவர்கள் ஆம், வலது புறமான இரண்டு தூண்க ளுக்கு இடையில் தொழுகையை நிறைவேற்றினார்கள் எனப் பதிலளித் தார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

## சுத்ரஹ் (திரை/தடுப்பு)

ஒரு வாலிபர் பள்ளிவாசலுக்குள் வந்தார், ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி (ர) அவர்கள் தனக்கு முன்பாக சுத்ரஹ் (திரை, தடுப்பு) வைத்துக்கொண்டு தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். பள்ளிவாசல் தொழுகை யாளிகளால் நிறைந்திருந்தது. அந்த வாலிபர் அவரைக் கடந்து செல்வ தற்காக வழியைத் தேடிக்கொண்டிருந்தார். ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி (ர) அவர்களுக்கு முன்னாலிருந்து செல்வதைத் தவிர வேறு வழி அவருக்கு இருக்கவில்லை, அவர் அவர்களுக்கு முன்னாலிருந்து செல்ல முற்பட்டார்,

www.uzarfalahi.com

அவர்கள் அவனைத் தடுத்துவிட்டார்கள். மீண்டும் இரண்டாவது முறையாக அவர் கடந்து செல்ல நினைத்தார், அதற்கு ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி (ர) அவர்கள் மிகவும் வலிமையாகத் தடுத்துவிட்டார்கள். அந்த வாலிபருக்குக் கோபம் வந்துவிட்டது, அவர் மதீனா முனவ்வரஹ்வின் ஆளுநர் ஹஜ்ரத் மர்வான் பின் ஹகம் (ர) அவர்களிடம் சென்று முறையிட்டார். அப்போது ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி (ர) அவர்கள் கூறினார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களைக் கூறக்கேட்டேன், அவர்கள் ﷺ கூறினார்கள், உங்களில் எவரும் சுத்ரஹ் முன்னால் வைத்துத் தொழுதுகொண்டிருந்தால், உங்களுக்கு முன்னாலிருந்து எவரும் கடந்து செல்ல நினைத்தால் நிங்கள் அவரைத் தடுத்துவிடுங்கள், அவர் நிற்காவிட்டால் அவரை வலிமையாகத் தடுத்துவிடுங்கள. ஏனெனில், அது ஷைத்தானகாத்தான் இருப்பான் (புக்ஹாரி, முஸ்லிம்). சுத்ரஹ் என்பது ஒருவர் தொழுகைக்காக நிற்கும் போது அவருக்கு முன்பாக ஒன்றை ஆக்கிக்கொள்வதாகும், உதாரணமாக, ஒரு தூண் அல்லது சுவர் அல்லது ஒரு கைத்தடியை நிற்க வைத்துக்கொள்வது அல்லது ஏதும் கிடைக்கவில்லையென்றால், தரையின்மீது ஒரு கோட்டையாவது கிழித்துக்கொள்ளவேண்டும், இதன் மூலம் சுதரஹ்வுடைய நோக்கம் பூர்த்தியடைந்துவிடுகின்றது. ஞாபகமிருக்கட்டும், இமாம் தனக்கு முன்னால் சுத்ரஹ்வை வைத்துக்கொள்வாரேயானால், அதுவே அவரைப் பின்பற்றித் தொழுபவர் அனைவருக்குமான சுத்ரஹ்வாகக் கருதப்படும். மக்கள் நெருக்கமான கூட்டம் இருக்கும் நிலையில் ஸஃப்புகளுக்கு இடையில் கடந்துசெல்லலாம். சில சமயங்களல் இறைத்தூதர் ﷺ அவர்கள் சுத்ரஹ் வைக்காமலேயே தொழுகை நிறைவேற்றியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

www.uzairfalahi.com

* * *